இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்வி முதுமாணி பட்டப்படிப்பு- 2023/2024

இறுதிப்பரீட்சை – 2024

**STP9619- கல்வி வழிகாட்டலும் ஆலோசனை சேவையும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- **21.08.2024** நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. **i.** மூன்று (03) உதாரணங்களை குறிப்பிடுவதன் மூலம் ஆலோசனையின் நோக்கங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** நான்கு (04) காரணிகளை குறிப்பிடுவதன் மூலம் வாழ்க்கை நீடித்த கல்வியையும், மாணவர் கல்வி அடைவினையும் கல்வி வழிகாட்டல் ஆலோசனை சேவையினால் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை மதிப்பீடு செய்க.

(08 புள்ளிகள்)

**iii.** ஒரு ஆசிரியர் சிறந்ததொரு ஆலோசகராக செயற்படுவதற்கு வளர்த்துக் கொள்ளக் கூடிய நான்கு (04) பண்புகளை அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதன் ஊடாக கலந்துரையாடுக.

(09 புள்ளிகள்)

2. **i.** மூன்று (03) காரணங்களை குறிப்பிடுவதன் ஊடாக ஏன் ஆலோசகர்கள் ஒழுக்கங்களை (Ethics) பின்பற்ற வேண்டும் என்பதை கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

**ii.** ஆலோசனை நாடியுடன் வினைத்திறனான உறவொன்றினை மேற்கொள்வதற்கு ஆலோசகரால் மேற்கொள்ளமுடியுமான நான்கு (04) நெறிமுறைகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** மாணவர்களுக்கு ஆலோசனை வழிகாட்டும் போது பாடசாலை ஆலோசகரால் முகம் கொடுக்க கூடிய இரண்டு (02) பிரச்சினைகளை விளக்கி, அப்பிரச்சினைகளுக்கான இரண்டு (02) காரணிகளையும் பகுப்பாய்வு செய்க.

(09 புள்ளிகள்)

3. **i.** அறிகைசார் நடத்தை அணுகுமுறை (Cognitive Behavior Approach) மற்றும் தனியாள் மைய அணுகுமுறை (Personal Centered Approach) என்பனவற்றின் பிரதான தத்துவங்களின் அடிப்படையில் இரண்டினையும் ஒப்பிட்டு வேறுபிரித்தறிக.

(08 புள்ளிகள்)

**ii.** சிகிச்சை சார் செயன்முறையின் போது இவ்விரண்டு அணுகுமுறைகளும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** இந்த சிகிச்சை சார் அணுகுமுறையின் வரையறைகளை கலந்துரையாடுக.

(09 புள்ளிகள்)

4. **i.** இலங்கை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்வி வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தற்போதைய நிலைமையை விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** இலங்கை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற தற்போதைய ஆலோசனை வழிகாட்டல் சேவை நிகழ்ச்சித்திட்ட சவால்களையும் பிரதான இடைவெளிகளையும் கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

**iii.** இலங்கை பாடசாலைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஆலோசனை வழிகாட்டல் சேவைகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான **மூன்று** (03) உபாயங்களை முன்மொழிக.

(09 புள்ளிகள்)

5. **i.** வினைத்திறனான ஆலோசனை வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படை அம்சங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** உங்களுடைய பாடசாலையின் இடைநிலை மாணவர்களிடத்தில் நீங்கள் இனங்கண்ட தேவை ஒன்றினை பூர்த்தி செய்வதற்கு மேலே நீங்கள் குறிப்பிட்ட இயல்புகளை உள்ளடக்கி ஒரு வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டத்தினை உருவாக்குக.

(08 புள்ளிகள்)

**iii.** உங்கள் பாடசாலையில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தும் போது முகம் கொடுக்கக்கூடிய **இரண்டு** (02) சவால்களை கலந்துரையாடுக.

(09 புள்ளிகள்)

6. **i.** தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் **நான்கு** (04) கூறுகளையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** இரண்டாம் நிலை மாணவர்களின் தொழில் வாழ்க்கையையும் அவர்களது திறமைகளையும் இனங்காண்பதற்காக எவ்வாறு உங்களால் உதவி செய்யலாம் என்பதற்கான **இரண்டு** (02) நுட்பங்களை கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

**iii.** உலகில் பல்வேறுபட்ட தொழில்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை தெரிந்து கொள்வதற்கு உங்கள் பாடசாலை மாணவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதற்கான **மூன்று** (03) உபாயங்களை விளக்குக.

(09 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -